# தமிழறிஞர் தமிழண்ணல்



**நினைவு நாள்**

**திசம்பர் 29**

- மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவும், ஆட்சிப் பேரவை உறுப்பினராகவும், தியாகராசர் கல்லூரியில் பேராசிரியராகவும் திறம்பட தமிழ்ப் பணியாற்றியவர்.
- சாகித்ய அகாதெமியின் பொதுக்குழு உறுப்பினர், ஞானபீட விருதுக்குரிய மதிப்புரைஞர் குழு உறுப்பினர், தமிழக அரசின் சங்க இலக்கியக்குறள் பீடத்தின் துணைத் தலைவர், தமிழகப்புலவர் குழுவின் உறுப்பினர், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் ஆய்வரங்கக் குழுவில் உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளில் மொழி நலனுக்காகத் தொடர்ந்து இயங்கியவர்.
- இரா. நாகசாமி எழுதிய **'The mirror of Tamil and Sanskrit'** நூலைக் கண்டித்துத் 'இரா. நாகசாமியின் பழுதடைந்த கண்ணாடியும், பார்வைக் கோளாறுகளும்' என்ற நூலைத் திறனாய்வு நோக்கில் எழுதி மொழி நலம், இன நலம் காத்த போராளி.
- மேனாள் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்களான முனைவர் மு.தமிழ்க் குடிமகன், முனைவர் கா. காளிமுத்து ஆகியோரது முனைவர் பட்ட ஆய்வுக்கு நெறியாளராக இருந்து தமிழாய்வுக்கு வழிகாட்டியவர்.
- தமிழ்ச்சான்றோர் பேரவை தமிழ்வழிக் கல்வியை முன்னிலைப்படுத்தி நடத்திய சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்திலிருந்து சிலம்பொலி செல்லப்பனார் விலகிய பின் தலைமையேற்று மொழிக்காப்பு பணிக்கு உரமாயிருந்த போராளி.
- தமிழ்நாட்டரசின் திரு வி.க விருதும் தமிழ்ச்செம்மல் விருதும் ஒன்றிய அரசின் செம்மொழி விருதும் பெற்ற பெருமைக்குரியவர்.

**நான்காம் தமிழ்ச் சங்கம், மதுரை**

**செந்தமிழ்க் கல்லூரி**